**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு. M. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 2ம் நாள்
2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை
*****

**அசல் வழக்கு எண். 296/2017ல் இடைமனு எண்.06/2025**

நாகராஜன் **...மனுதாரர்/வாதி**

**...எதிர்...**

1. கலியன் என்கிற
கலியமூர்த்தி
2. ராஜாராமன் **...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 09.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B. ரெங்கராஜு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டுள்ளதை Re–open செய்யகோரி மனுதாரர்/வாதியால் இம்மனு உ.வி.மு.ச.151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்து இரு தரப்பு வாதமும் முடிக்கப்பட்டு, பதில் வாதுரைக்காக கெடு போடப்பட்டுள்ள நிலையில், மேற்படி வழக்கு தாக்கல் செய்யும் போது பிராதில்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.16 16:39:30 +0530

மனுதாரர் தனது வயதை 45 என்று தவறாக குறிப்பிட்டு விட்டதாகவும், மனுதாரர் பள்ளியில் சேர்ந்து படிக்கவில்லை என்பதால் அவரிடம் பிறப்பு சான்று, பள்ளி மாற்று சான்று போன்ற ஆவணங்கள் இல்லாத காரணத்தால் வயதை தவறாக குறிப்பிட்டு விட்டதாகவும்,

**(1.2)** மனுதாரர் 1960ல் பிறந்துள்ளார் என்றும், தற்போது மனுதாரருக்கு 65 வயதாகிறது என்றும், அதற்கு ஆதாரமாக ஆதார் அட்டை மட்டுமே உள்ளது என்றும், மேற்படி ஆதார் அட்டையை தற்போது இவ்வழக்கில் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், எனவே, இந்த வழக்கை Re-open செய்து உத்தரவிடக்கோரி, மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

**(2.1)** உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்கு விசாரணை துவங்கப்பட்ட பிறகு எந்த திருத்தமும் அனுமதிக்கப்படக் கூடாது என்றும், மனுதாரர் பிறந்த தேதியை மாற்றக் கோரும் இம்மனு பொய்யானது என்றும், இவ்வழக்கின் இரு தரப்பு வாதமும் முடிக்கப்பட்டு, தீர்ப்புரைக்காக நிலுவையில் உள்ள நிலையில், அசல் வழக்கில் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக ஏற்படுத்தியுள்ள வெற்றிடங்களை மனுதாரரால் இம்மனுவின் மூலம் நிரப்பிவிட முடியாதென்றும்,

**(2.2)** எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் வயது 8 என்று சுட்டிக்காட்டப்பட்டு வாதம் செய்து முடிக்கப்பட்ட பிறகு, RTR மற்றும் இதர ஆவணங்களும் அதை உறுதிப்படுத்தும் நிலையில், மனுதாரர் குறிப்பிடுவது போல் வயதை மாற்றம் செய்ய முடியாது என்றும், எனவே, மிகவும் முக்கிய சங்கதியான மனுதாரரின் வயதை எதிர்மனுதாரர்களின் வாதத்திற்கு பின்பு மாற்ற முடியாது என்றும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.16 16:39:37 +0530

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது இரு தரப்பு வாதமும் முடிக்கப்பட்ட நிலையில், மனுதாரர்/வாதி அசல் வழக்கில் தனது வயதை தவறாக குறிப்பிட்டு விட்டதாகவும், அவரது உண்மையான வயது ஆதார் அட்டையில் மட்டுமே சரியாக உள்ளதால், அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய அசல் வழக்கில், இரு தரப்பு வாதமும் முடிக்கப்பட்டதை Re–Open செய்ய கோரி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) அசல் வழக்கில் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக ஏற்படுத்தியுள்ள வெற்றிடங்களை மனுதாரரால் இம்மனுவின் மூலம் நிரப்பிவிட முடியாதென்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் வயது 8 என்று சுட்டிக்காட்டப்பட்டு வாதம் செய்து முடிக்கப்பட்ட பிறகு, RTR மற்றும் இதர ஆவணங்களும் அதை உறுதிப்படுத்தும் நிலையில், மனுதாரர் குறிப்பிடுவது போல் வயதை மாற்றம் செய்ய முடியாது என்றும் வாதிடப்பட்டது.

(iii) அசல் வழக்கில் இருதரப்பு வாதமும் முடிக்கப்பட்டு, பதில் வாதுரைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும், மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு வாய்ப்பு இருப்பதாலும், இது விசாரணை



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.16 16:39:43 +0530

நீதிமன்றமாக இருப்பதாலும், தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி, அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டுள்ளதை Re-open செய்யகோரி மனுதாரர்/வாதியால் உ.வி.மு.ச.151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுதிக்கலாம் என்று தீர்மானித்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியில்,** மனுதாரர்/வாதி செலவுத்தொகையாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்), எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு வரும் 26.03.2026-ம் தேதிக்குள் கொடுக்கும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க –** 27.03.2026

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.16 16:39:51 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.03.16 16:39:58 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு உத்தரவு**
அசல் வழக்கு எண்.296/2017
இடைமனு எண்.6/2025
நாள்.16.03.2026.